1273

සියලු ම හිමිකම් ඇවිරිණි/
முழுப் பதிப்புரிமையுடையது/
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2014**

Open / Limited Competitive Examination for Recruitment to Grade III of the Sri lanka Accountants' Service - 2014

**(01) நிதிக் கணக்கியல் - வினாத்தாள் I**

Financial Accounting - Paper I

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

**எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

**1.** சிறிபுர தனியார் லிமிடெட் கம்பனியின் 31.03.2014 திகதியிலான பரீட்சை மீதி கீழே தரப்படுகின்றது.

| | **வரவு ('000)** | **செலவு ('000)** |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் ( 4 000 பங்குகள்)................ | | 20 000 |
| மீட்கப்பட முடியாத முன்னுரிமை பங்கு மூலதனம் (2 000 பங்குகள்)........... | | 10 000 |
| 01.04. 2013. ல் நிறுத்தி வைத்த இலாபம் .................... | | 2 500 |
| விற்ற பொருள் கிரயம் / விற்பனை .............................. | 175 000 | 371 800 |
| வங்கிகடன் .............................................................. | | 20 000 |
| விநியோகச் செலவுகள் ................................................ | 15 000 | |
| நிர்வாகச் செலவுகள் ................................................... | 12 000 | |
| ஏனைய செலவுகள் ...................................................... | 7 500 | |
| நிதிச் செலவுகள் ........................................................ | 2 500 | |
| செலுத்திய வருமானவரி - 2013/2014 .......................... | 5 500 | |
| - 2012/2013 .......................... | 1 600 | |
| **சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணம்** | | |
| காணி ....................................................................... | 150 000 | |
| கட்டிடங்கள் ............................................................ | 12 000 | |
| மோட்டார் வாகனங்கள் ................................................ | 10 500 | |
| **01.04. 2013 திகதியிலான தேய்மான ஒதுக்கம்** | | |
| கட்டிடம் .................................................................. | | 1 200 |
| மோட்டர் வாகனம் ...................................................... | | 1 900 |
| 31.03. 2014 தொக்கு ................................................... | 2 000 | |
| வியாபார வருமதியாளர்கள் ........................................... | 5 000 | |
| வியாபார சென்மதியாளர்கள் ......................................... | | 6 000 |
| 01.04. 2013 வருமானவரி ஒதுக்கம் ................................ | | 1 500 |
| வங்கி ....................................................................... | 15 000 | |
| இடைக்கால பங்கிலாபம் செலுத்தியது | | |
| சாதாரண பங்குகள் ........................................ | 4 000 | |
| முன்னுரிமைப் பங்குகள் .................................. | 2 000 | |
| முதலீடுகள் ............................................................... | 33 500 | |
| தொங்கல் கணக்கு ...................................................... | | 18 200 |
| | **453 100** | **453 100** |

**மேலதிக் தகவல்கள்**

(i) 31.03. 2014 திகதியிலான புதியபொருள் கண்டுபிடிப்பு உரிமத்தின் தேறிய கைக்கு கிட்டிய பெறுமதி ரூபா 1 800 000.

(ii) கம்பனி 31.03. 2014 ல் காணியினை மீள்மதிப்பீடு செய்தது. காணியின் பெறுமதி மீள்மதிப்பீட்டின் பின் காணியின் பெறுமதி ரூபா 200 000 000 ஆகும் இது புத்தகங்களில் காட்டப்படவில்லை.

| பக் 2 ஐப் பார்க்க.

(iii) கம்பனியானது 01.04. 2009 ல் ரூபா 1 500, 000 க்கு கொள்வனவு செய்யப்பட்ட வாகனத்தை 31.03. 2014 ல் ரூபா 800 000 மோட்டார் வாகனமொன்றை விற்பனை செய்தது. கிடைத்த பணம் வங்கிக்கணக்கு மற்றும் மோட்டார் வாகன கணக்கில் பதியப்பட்டது. மோட்டார் வாகனத்தை விற்பனை சம்பந்தமாக வேறு எந்த பதிவும் கணக்குப் புத்தகங்களில் மேற்கொள்ளப்படவில்லை.

(iv) கம்பனியானது நடைமுறை அல்லாத சொத்துக்கு நேர்கோட்டு முறையில், கிரயத்தில் கீழ் காட்டப்பட்டவாறு தேய்மானம் கழிக்கப்படுகிறது.

மோட்டார் வாகனங்கள் - 25% வருடமொன்றிற்கு

கட்டிடம் - 10% வருடமொன்றிற்கு

(v) வங்கிகடன் 01.01. 2014 இல் பெறப்பட்டது. கடன் தொகையினை சமனான நான்கு காலாண்டு தவணையில் 01.04.2014 திகதியிலிருந்து மீளச் செலுத்தப்பட்ட வேண்டும்.

(vi) பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள வங்கி மீதி மார்ச்சு 2014 வங்கி கணக்கு இணக்கக் கூற்று தயாரிக்கப்படுவதற்கு முன்னர் பெறப்பட்டதாகும். வங்கி கணக்கு இணக்கக்கூற்று தயாரிக்கும்போது கீழே வரும் தகவல்கள் குறிப்பெடுக்கப்பட்டன.

- வங்கியில் வைப்பிலிடப்பட்ட போதும் தேறாத காசோலை ரூபா 5 000 000.
- வழங்கப்பட்டபோதும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூபா 3 000 000.
- ரூபா 1 000 000 வருமதியாளர் ஒருவரால் வியாபார வங்கிக் கணக்குக்கு வைப்பிலிடப்பட்ட போதும் வியாபார புத்தகங்களில் பதியப்படவில்லை.
- ரூபா 500 000 பெறுமதியான காப்புறுதி தொகை வங்கியில் நிலையான கட்டளையின்பேரில் செலுத்தப்பட்டிருந்தபோதிலும் வியாபார புத்தகங்களில் பதியப்படவில்லை.

(vii) வருடத்திற்கான வருமான வரி பொறுப்பு ரூபா 8 500 000 என மதிப்பிடப்பட்டது.

(viiii) 2014.04.20 திகதியிலேற்பட்ட தீ விபத்தின்போது வியாபார கட்டிடப் பகுதியொன்று சேதமடைந்தது. இந்த நட்டத்தின் பெறுமதி ரூபா 200 000 என மதிப்பிடப்பட்டது.

(ix) கணக்கீட்டு செய்முறையின்போது பின்வரும் வழுக்கள் ஏற்பட்டதாக கண்டுபிடிக்கப்பட்டது.

- விற்பனை பட்டியல் ரூபா 2 200 000 கணக்கீட்டு ஏடுகளிலிருந்து முற்றாக பதியப்படாமல் விடுபட்டிருந்தது.
- விளம்பர செலவு ரூபா 7 500 000, புத்தகங்களில் 5 700 000 ஆக பதியப்பட்டிருந்தது.
- பெறப்பட்ட 10 000 000 வாடகை வருமானம் வங்கி கணக்கில் சரியாக பதியப்பட்டிருந்த போதிலும் வாடகைச் செலவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(x) கம்பனியினது இயக்குனர்களால் 30.05.2014 எடுக்கப்பட்ட இயக்குநர்கள் சபை தீர்மானத்தின்படி கீழ்வருவன தெரிய வந்தது.

- 31.03.2014 லுள்ள சாதாரண பங்கு மூலதனகாரர்களுக்கு பங்கொன்றுக்கு ரூபா 3 பங்கு இலாபம் வருடமொன்றிற்கு செலுத்துவதற்கு
- 31.03.2014 லுள்ள முன்னுரிமை பங்கு மூலதனகாரருக்கு பங்கொன்றிற்கு வருடமொன்றுக்கு ரூபா 2 பங்கு இலாபம் பங்கு ஒன்றுக்கு செலுத்துவதற்கு

(xi) நிதிக்கூற்றுக்கள் 10.06.2014 ல் பணிப்பாளர் சபையினால் வெளியிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்டது.

**வேண்டப்படுவது**

வரையறுக்கப்பட்ட சிறிபுர நிறுவனத்திற்கான விளம்பரப்படுத்துவதற்கு பொருத்தமான முறையில் கீழே குறிப்பிட்டவற்றைத் தயாரிக்குக.

(1) 31.03.2014 ல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒன்றித்த வருமானக் கூற்று

(2) 31.03.2014 உள்ளவாறான நிதி நிலைபரக்கூற்று

(3) 31.03.2014 ல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றங்களுக்கான கூற்று

(4) சொத்துக்கள் மற்றும் பொறி உபகரணத்துக்கான கணக்கு குறிப்பு

*( 40 புள்ளிகள்)*

**2.** (i) கணக்கீட்டு விகிதங்களை பாவிப்பதிலுள்ள **இரண்டு** நன்மைகள் மற்றும் மட்டுப்பாடுகளை கூறுக.

(ii) பொறுப்புக்கள் வரையறுத்த கம்பனியொன்றின் உரிமைப் பங்கு மற்றும் உபகாரப் பங்கு வழங்கலிலுள்ள வேறுபாடுகளையும், ஒற்றுமையும் எழுதுக.

(iii) கணனி அடிப்படையிலான கணக்கீட்டு முறைமையின் நன்மைகள் **நான்கை** குறிப்பிடுக.

(iv) கணக்கீட்டு மென்பொருள் ஒன்றை வாங்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் **நான்கை** குறிப்பிடுக.

(v) நிதிக்கூற்றுக்களின் மட்டுப்படுத்தல்கள் **நான்கை** எழுதுக.

*( 10 புள்ளிகள்)*

[ பக் 3 ஐப் பார்க்க.

**3.** அருணோதய மட்டுப்படுத்தப்பட்ட தனியார் கம்பனியின் சாராம்சப்படுத்திய நிதிக் கூற்றுக்கள் கீழே தரப்படுகின்றன.

**அருணோதய மட்டுப்படுத்தப்பட்ட தனியார் கம்பனி**
**31.03.2014 ல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று**

| | ரூபா. '000 | ரூபா. '000 |
|---|---|---|
| விற்பனை | | 75 000 |
| விற்ற பொருள் கிரயம் | | (40 000) |
| மொத்த இலாபம் | | 35 000 |
| ஏனைய வருமானம் **(குறிப்பு 01)** | | 10 000 |
| | | 45 000 |
| விநியோக செலவுகள் | 10 000 | |
| நிர்வாகச் செலவுகள் | 15 000 | |
| நிதிச் செலவுகள் கடன் வட்டி | 5 000 | |
| | | (30 000) |
| வரிக்கு முன் இலாபம் | | 15 000 |
| வருமானவரி | | (5250) |
| வருடத்துக்கான இலாபம் | | 9 750 |
| **ஏனைய ஒன்றித்த வருமானம்** | | |
| காணி மீள் மதிப்பு மேலதிகம் | | 1000 |
| **வருடத்துக்கான மொத்த ஒன்றித்த வருமானம்** | | **10 750** |

**அருணோதய மட்டுப்படுத்தப்பட்ட தனியார் கம்பனி**
**31 மார்ச்சிலான நிலை நிலபரக்கூற்று**

| | **2014 (ரூ. '000)** | **2013 (ரூ. '000)** |
|---|---|---|
| சொத்துக்கள், பொறி மற்றும் உபகரணம் **(குறிப்பு 02)** | 200 000 | 213 000 |
| முதலீடுகள் | 57 000 | 40 000 |
| தொக்குகள் | 7 000 | 12 000 |
| வியாபார வருமதியாளர் | 25 000 | 50 000 |
| முதலீட்டு வருமானம் பெறவேண்டியது | 5 000 | 7 000 |
| காசு | 63 000 | 78 000 |
| | **357 000** | **400 000** |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 112 000 | 100 000 |
| மீள் மதிப்பு ஒதுக்கம் | 6 000 | 5 000 |
| பொது ஒதுக்கம் | 1 750 | 3 000 |
| நிறுத்தி வைத்த இலாபம் | 17 000 | 8 000 |
| வங்கிகடன் | 200 000 | 259 000 |
| வியாபார சென்மதியாளர் | 13 000 | 18 000 |
| அட்டுறு செலவு - வருமானவரி | 4 250 | 3 000 |
| - கடன்வட்டி | 3 000 | 4 000 |
| | **357 000** | **400 000** |

| பக் 4 ஐப் பார்க்க.

1273

**அருணோதய மட்டுப்படுத்தப்பட்ட தனியார் கம்பனி**
**31.03.2014 ல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மூலதனக் கூற்று**

(ரு. '000)

| | சாதாரண பங்கு மூலதனம் | மீள் மதிப்பு ஒதுக்கம் | பொது ஒதுக்கம் | நிறுத்திவைத்த இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **01.04.2013 மீதி** | 100 000 | 5 000 | 3 000 | 8 000 | 116 000 |
| பங்கு வழங்கல் | 10 000 | – | – | – | 10 000 |
| ஆண்டுக்கான மொத்த ஒன்றித்த வருமானம் | – | 1 000 | – | 9 750 | 10 750 |
| பொது ஒதுக்கம் | – | – | 750 | (750) | – |
| உபகாரப் பங்கு உழுங்கல் | 2 000 | – | (2 000) | – | – |
| **31.03.2014 மீதி** | **112 000** | **6 000** | **1 750** | **17 000** | **136 750** |

**குறிப்புகள் :**

**குறிப்பு 01**

| **ஏனைய வருமானம்** | **(ரு. '000)** |
|---|---|
| மோட்டார் வாகன விற்பனை இலாபம் | 2 000 |
| முதலீட்டு வருமானம் | 8 000 |
| | **10 000** |

**குறிப்பு 02**

**பொறி, உபகரணம் மற்றும் ஆதனங்கள்** ரு. '000

| | காணி | கட்டிடம் | மோட்டார் வாகனம் | |
|---|---|---|---|---|
| **01.04.2013 கிரயம்** | 100 000 | 60 000 | 90 000 | |
| சேர்ப்பு – | – | 10 000 | – | |
| மீள் மதிப்பு | 1 000 | – | – | |
| விற்றது | – | – | (20 000) | |
| **31.03.2014இல் மீதி** | **101 000** | **70 000** | **70 000** | |
| **01.04.2013 திரண்ட தேய்மானம்** | – | 12 000 | 25 000 | |
| வருடாந்த தேய்மானம் | – | 3 000 | 9 000 | |
| விற்றது | – | – | (8 000) | |
| **31.03.2014 மீதி** | – | **15 000** | **26 000** | |
| **31.03.2014 கொண்டு செல்லும் மீதி** | **101 000** | **55 000** | **44 000** | = **200 000** |

**வேண்டப்படுவது:**

31.03.2014 ல் முடிவடைந்த ஆண்டுக்கான அருணோதய தனியார் கம்பனியினது LKAS 07 இன்படி நேர்முறையிலான (Direct method) காசுப்பாய்ச்சல் கூற்று

*( 20 புள்ளிகள்)*

[ பக் 5 ஐப் பார்க்க.

**4.** 31.03.2014 ல் முடிவடைந்த ஆண்டுக்கான அமர மற்றும் சாமா வரையறுத்த தனியார் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் சுருக்கமாக தரப்படுகின்றன.

**31.03.2014 ல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று**

| | அமர கம்பனி (ரூ. '000) | சாமா கம்பனி (ரூ. '000) |
|---|---|---|
| விற்பனை | 2 250 | 2 000 |
| விற்ற பொருள் கிரயம் | (1 450) | (1 500) |
| மொத்த இலாபம் | 800 | 500 |
| செலவுகள் | (450) | (300) |
| வரிக்கு முன் இலாபம் | 350 | 200 |
| வருமான வரி | (150) | (100) |
| வருடத்துக்கான தேறிய இலாபம் | 200 | 100 |

**31.03.2014 திகதியிலான நிதி நிலைபரக்கூற்று**

| | அமர கம்பனி (ரூ. '000) | சாமா கம்பனி (ரூ. '000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 800 | 1 600 |
| தொக்கு | 100 | 200 |
| வியாபார வருமதியாளர் | 130 | 100 |
| காசு | 170 | 100 |
| | **1 200** | **2 000** |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | 500 | 1 000 |
| நிறுத்தி வைத்த இலாபம் | 360 | 400 |
| வங்கி கடன் | 140 | 200 |
| வியாபார சென்மதியாளர் | 80 | 220 |
| அட்டுறு செலவினம் | 120 | 180 |
| | **1 200** | **2 000** |

**மேலதிக தகவல்கள் :**

- கொடுப்பனவில் அமர மற்றும் சாமா போன்ற இரண்டு கம்பனிக்குமான கடன் வட்டி ரூ. 100 000 உள்ளடக்கப்பட்டது.

**வேண்டப்படுவது :**

கீழ்வரும் விகிதங்கள் இரண்டு கம்பனிகளுக்கும்:

(1) மொத்த இலாப விகிதம்
(2) தேறிய இலாப விகிதம்
(3) நடைமுறை விகிதம்
(4) திரவ விகிதம்
(5) வட்டி அடைப்பு (cover) விகிதம்
(6) உரிமைக்கான வருமான விகிதம்
(7) மொத்த சொத்துக்கான வருமான விகிதம்

*( 15 புள்ளிகள்)*

| பக் 6 ஐப் பார்க்க.

**5.** (i) சத்துருக்கவின் வியாபாரத்தின் 31.03.2014 திகதியிலான வருமதியாளர் மொத்த பேரேட்டு கணக்கு மீதியின் மொத்தம் ரூபா 75 000 (வரவு - Debit) அந்த திகதியிலான வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்குடன் இந்தமீதி இணங்கி இருந்தது. ஏப்ரல் 2014 தொடர்பிலான கீழ் வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

| | ரூபா. |
|---|---|
| கடன் விற்பனை ........................................ | 125 000 |
| காசு விற்பனை ........................................ | 210 000 |
| வருமதியாளரிடமிருந்து பெறப்பட்ட பணம் ........................................ | 100 000 |
| ஐயக்கடன் ஒதுக்கம் ........................................ | 7 500 |
| கொடுத்த கழிவு ........................................ | 10 000 |
| உட்திரும்பல் ........................................ | 5 000 |
| அறவிடமுடியாக் கடன் ........................................ | 4 000 |
| வருமதியாளர்களிடம் அறவிடப்பட்ட பிந்திய கொடுப்பனவு வட்டி ............ | 9 000 |

30.04.2014 இலுள்ள வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி மொத்த வருமதியாளர் பேரேட்டுக் கணக்கு மீதிகளுடன் இணங்கவில்லை. பரிசிலித்தபோது கீழ்வரும் விடயங்கள் விசாரணைகளின்போது தெரியவந்தது.

(அ) அறவிட முடியாக்கடனாக பதிவழிக்கப்பட்ட ரூபா 2 000 வருமதியாளர் பேரேட்டில் பதியப்படவில்லை.

(ஆ) கொடுத்த கழிவு ரூபா 3 000 வருமதியாளர் பேரேட்டில் உள்ள உரிய வருமதியாளர் கணக்கில் பிழையான பக்கத்தில் பதியப்பட்டிருந்தது.

(இ) விற்பனைப் பட்டியல் ரூபா 10 000 உரிய வருமதியாளர் பேரேட்டில் உள்ள வருமதியாளர் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

**வேண்டப்படுவது :**

(1) ஏப்ரல் 2014 க்கான வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு.

(2) 30 ஏப்ரல் 2014 வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கையும், வருமதியாளர் பேரேட்டுக் கணக்கிலுள்ள வருமதியாளர் மொத்த தொகைகளையும் இணக்கும் கூற்று.

(ii) வங்கிக் கூற்றுப்படி சத்துராவின் 31.07.2014 ஆந் திகதியிலான வங்கி மேலதிகப்பற்று மீதி ரூபா 40 000 வியாபாரத்தின் காசுப் புத்தகப்படி வங்கிமீதி அந்த திகதியில் இணங்கி இருக்கவில்லை. வித்தியாசத்திற்கான காரணிகள் கீழ்வருவனவாக இருந்தது.

(அ) வங்கியில் வைப்பிலிடப்பட்ட போதும் தேறாத காசோலையின் பெறுமதி ரூபா 15 000.

(ஆ) வழங்கப்பட்டபோதும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலையின் பெறுமதி ரூபா 10 000.

(இ) வியாபாரத்தின் காசுப் புத்திகத்தில் அஜந்த என்பவரால் நேரடி வைப்பு செய்யப்பட்ட பணம் ரூபா 12 000 பதியப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 4 000 தொலைபேசிக் கட்டணம் வியாபாரத்தின் வங்கியால் செலுத்தப்பட்டிருந்தபோதிலும் காசுப் பத்தகத்தில் பதியப்பட்டிருக்கவில்லை.

(உ) வியாபாரத்தின் நிலையான வைப்புக்கான வட்டி வருமானம் ரூபா 18 000 வங்கி கணக்குக்கு சேர்க்கப்பட்டிருந்தபோதும் வியாபார காசுப் பத்தத்தில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வங்கிக் கட்டணம் ரூபா 1 000 வியாபாரத்தின் காசுப் புத்தகத்தில் பதியப்படவில்லை.

**வேண்டப்படுவது :**

(1) சீராக்கப்பட்ட யூலை 2014 மாதத்துக்கான காசுப் புத்தக / வங்கி கணக்கு

(2) யூலை 2014 மாதத்தக்கான வங்கி கணக்கு இணக்கக்கூற்று.

*( 15 புள்ளிகள்)*

※ ※ ※